செ.வெ.எண்.10 நாள்.06.11.2017.

திருநெல்வேலி மாவட்டம்

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ.3.16 இலட்சம் மதிப்பில் 42 குழந்தைகளுக்கு நிதி ஆதரவு திட்ட நிதியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (06.11.2017) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் 42 குழந்தைகளுக்கு நிதி ஆதரவு திட்ட நிதியாக ரூ.3.16 இலட்சம் மதிப்பில் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்ட வங்கி கணக்கு புத்தகங்களை மாணவ, மாணவிகளிடம் வழங்கினார்.

மேலும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ், சிவகிரி வட்டம், இராயகிரி பகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி திரு.பிள்ளையார் என்பவருக்கு மாற்றுத்திறனாளிக்கான மாதாந்திர உதவித் தொகைக்கான உத்தரவினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்ள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ. முத்துராமலிங்கம், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.எஸ். சங்கரலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிமலி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.பி.எஸ்.தேவ் ஆனந்த் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.